**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி – முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் – 675 தற்காலிக பணியிடங்கள் – 01.06.2014 முதல் 31.05.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (ப.க2(1)த் துறை**

அரசாணை (1டி) எண்.42

நாள் : 16. 02 .2015
திருவள்ளுவராண்டு 2046
மாசி மாதம் 04ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.142, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 20.05.2010.
2. அரசாணை(நிலை) எண்.143, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 21.05.2010.
3. அரசாணை(நிலை) எண்.157, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 10.06.2010.
4. அரசாணை(நிலை) எண்.159, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 14.06.2010.
5. அரசாணை(நிலை) எண்.177, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 05.07.2010.
6. அரசாணை(நிலை) எண்.183, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 07.07.2010.
7. அரசாணை(நிலை) எண்.199, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 21.07.2010.
8. அரசாணை(நிலை) எண்.236, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 13.08.2010.
9. அரசாணை(நிலை) எண்.228, பள்ளிக் கல்வி(மேநிக2)துறை, நாள் 11.08.2011.
10. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.33235/எல்3/2014, நாள் 17.06.2014.

-------

**ஆணை:**

மேலே 1 முதல் 8 வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி 2010–2011 ஆம் ஆண்டில் 135 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, ஒரு மேல்நிலைப்பள்ளிக்கு 5 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 675 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தற்காலிகமாக தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது என்றும், மேற்குறிப்பிட்ட 675 முதுகலை பட்டதாரி ஆசிரியர் தற்காலிக பணியிடங்களில் 475 பணியிடங்கள் 01.06.2010 முதலும், 150 பணியிடங்கள் 15.06.2010 முதலும் 50 பணியிடங்கள் 10.07.2010 முதலும் நிரப்பப்பட்டுள்ளது என்றும், பார்வை 9ல் காணும் அரசாணையின்படி 31.05.2014 முடிய தொடர்நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேற்காணும் அரசாணைகளின்படி தோற்றுவிக்கப்பட்ட 675 முதுகலை பட்டதாரி ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு அரசாணை எண்.234, நிதித்துறை, நாள் 01.06.2009 மற்றும் அரசாணை(நிலை) எண்.23, நிதி(ஊ.கு) நாள்–12.01.2011–ன்படி ரூ.9300–34800 + 4800 தர ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், இப்பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு 31.05.2014வுடன் முடிவடைந்துள்ளதால் இப்பணியிடங்களுக்கு 01.06.2014 முதல் மேலும் 5 ஆண்டுகள் தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மேலே பத்தி–1ல் குறிப்பிடப்பட்டுள்ள 675 முதுகலை பட்டதாரி ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800/–, 01.06.2014 முதல்

31.05.2015 வரை அல்லது தற்காலிகப் பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித்துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அது வரை தொடர்நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. தொடர் நீட்டிப்பு வழங்கப்படும் அனைத்து தற்காலிக பணியாளர்களும் சம்பளம் மற்றும் இதர படிகள் அனைத்தும் அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளின்படி பெறத் தகுதியுடையவர்களாவார்கள்.

4. மேலே பத்தி–3ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் மேற்கொள்ள கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>அரசுப் பள்ளிக்களுக்கென கணக்குத் தலைப்பு</u>

"2202–பொதுக்கல்வி–02–இடைநிலைக் கல்வி 109 –அரசு இடைநிலைப் பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது –AA- அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 01 சம்பளங்கள்.

(த.தொ.கு 2202–02–109–AA–0108)

<u>நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:</u>

"2202 பொதுக்கல்வி–02–இடைநிலைக் கல்வி 109 – அரசு இடைநிலைப் பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது –AB- நகராட்சி, மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்–01 சம்பளங்கள்.

(த.தொ.கு 2202–02–109–AB–0106)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2343/Edn-II/2014, நாள்–16.02.2015–ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பள கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.
<u>நகல்</u>
நிதிக் (கல்வி II)துறை, சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

அ.ஜோதி
அரசு சார்புச் செயலாளர்.
16/2/15